# TNPSC GROUP II (INTERVIEW) 2018 - Chennai

**Test Series : 022** | **Test ID : 022**

**Number of questions: 200** | **Test date: 08.11.2018**

**Name:** ________________________________ **Time**: 3 hrs

**ID No**: ____________________ **Marks : 300**

**Marks: No negative marks.**

---

1. புலவராற்றுப்படை-எத்தனையாவது திருமுறை.
A) மூன்றாவது திருமுறை
B) ஏழாவது திருமுறை
C) பத்தாவது திருமுறை
D) பதினொன்றாவது திருமுறை.

2. கான மஞ்சரைக்குக் கலிங்கம் நல்கிய புகழுக்குரியவன் நாடு எது?
A) தொண்டை நாடு B)மலைநாடு
C)குமரி நாடு D)புனல் நாடு

3. அகநானூற்றைத் தொகப்பித்தவன்.
A) பன்னாடு தந்த பாண்டியன் மாறன்
B) பூரிக்கோ
C) பாண்டியன் உக்கிரப் பெருவழுதி
D) நல்லந்துவனார்

4. ஐங்குறுநூற்றில் நெய்தல் திணையைப் பாடிய புலவர்
A) கபிலர் B) அம்மூவனார்
C) ஓரம்போகியார் D) ஓதலாந்தையார்

5. அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப் பால் - இவை உடைய அதிகாரங்களின் எண்ணிக்கை நிரல்படுத்துக.
A) 38,70,25 B) 70,25,38
C) 38,25,70 D)25,38,70

6. விருத்தப்பாவினால் இயற்றப்பெற்ற முதல் தமிழ்க் காப்பியம்
A) கம்பராமாயணம் B) சீவகசிந்தாமணி
C) சீறாப்புராணம் D) பெரியபுராணம்

7. பரணிக்கோர் சயங்கொண்டார் - எனும் புகழுரை யாருடையது.
A)ஒட்டக் கூத்தர் B) பாவேந்தர்
C) பாரதியார் D)பலபட்டடைச் சொக்கநாதர்.

8. இருபால் பிள்ளைத்தமிழுக்கும் பொதுவாக அமையும் பருவங்கள் எத்தனை?
A)நான்கு பருவங்கள் B)ஆறு பருவங்கள்
C)ஏழு பருவங்கள் D) எட்டுப் பருவங்கள்

9. மனோன்மணீயம் நூலின் முதல் நூல் ஆசிரியர்
A) காலின் பிரபு B) ஜான் மில்டன்
C) ரிப்பன் பிரபுD) லிட்டன் பிரபு

10. வெண்டளை விரவிய கலிவெண்பாவின் இரண்டடிகளை என்னென்று கூறுவர்.
A) குறள் B) சிந்து
C) கண்ணி D) தூக்கு

11. வேதம் அனைத்திற்கும் வித்து எனப் புகழப்படுவது.
A) பெருமாள் திருமொழி B) பெரியதிருமடல்
C) சிறிய திருமடல் D) திருப்பாவை

12.கிறிஸ்துவக் கம்பர் என H.A. கிருட்டிண்பிள்ளை பெயர் பெறக் காரணம்.
A)கம்பராமாயணத்தை கிறித்துவர்க்கு நடத்தியதால்
B) இவர் நூல் எங்கும் இராமாயணத் தாக்கம் காணப்படுவதால்.
C) கம்பத்தடியில் அமர்ந்து கிறித்துவ இலக்கியம் இயற்றியதால்
D) கிறித்துவராய் இருந்து கம்பர் போல் நடை உடை இருந்ததால்

13. அம்மை, அப்பன் - இச்சொற்கள்.
A) இயற்சொல் B) திரிசொல்
C) திசைச்சொல் D) வடசொல்

14.மகாவித்வான் மீனாட்சி சுந்தரனாரிடம் உ.வே.சா எவ்வூரில் தமிழ்கற்றார்.

A) சிதம்பரம் B) தருமபுரம்

C) திருப்பனந்தாள் D) திருவாவடுதுறை

15.தமிழகத்தின் வேர்ட்ஸ் வொர்த் எனப் புகழப்படுபவர்

A) வாணிதாசன் B) பாரதிதாசன்

C) கண்ணதாசன் D) முடியரசன்

16. பழம்பெரும் தமிழர்தம் நாகரிகத் தொட்டில்

A) மதுரை B) உறையூர்

C) புகார் D) தஞ்சை

17. தமிழ் இணையப் பல்கலைக்கழகம் எங்கு அமைந்துள்ளது

A) பெங்களூரு B) தஞ்சை

C) சென்னை D) மதுரை

18.எழுத்துமுறை ஆய்வுக்கு வித்திட்ட அயலவர்கள்.

1. ஜி.யு. போப்
2. கால்டுவெல்
3. எல்லிஸ்
4. வீரமாமுனிவர்

A) 1-ம் 4-ம் சரி B) 1,2,4 சரி

C) 2,3,4 சரி D) 1,3,4 சரியில்லை

19.பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல் - என்று கூறும் நூல்.

A) பாலைக் கலி B) முல்லைக் கலி

C) மருதக் கலி D) குறிஞ்சிக் கலி

20. வேளாண்வேதம் என் அழைக்கப்பெறம் அறநூல்.

A) திரிகடுகம் B) நாலடியார்

C) ஏலாதி D) பழமொழி

21. குலசேகரஆழ்வாரின் பாசுரங்கள்

A)பெருமாள் திருமொழிB) திருமாலை

C) திருப்பள்ளியெழுச்சி D) பெரிய திருமடல்

22. முதலாழ்வார் எனப் போற்றப்படுபவர்கள்

A) பொய்கையாழ்வார் , பூதத்தாழ்வார், பேயாழ்வார்

B) பொய்கையாழ்வார், திருமழிசையாழ்வார், பேயாழ்வார்

C) குலசேகராழ்வார், திருமழிசையாழ்வார், பேயாழ்வார்.

D) மதுரகவியாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்

23. தாயுமானவர்- செய்த பணி

A) ஆசிரியர் B) கருவூல அலுவலர்

C) அமைச்சர் D) தளபதி

24. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு - இக்குறட்பா பயிலும் அணி.

A) சொற்பொருட் பின்வருநிலை அணி

B)வேற்றுமை அணி

C) சொல்பின்வருநிலை அணி

D) உருவக அணி

25. உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு - இக்குறட்பாபயிலும் அணி.

A) உருவக அணி B) உவமை அணி

C)தன்மை அணி D) வேற்றுமை அணி

26. தன் எட்டுமாதக் கடற்பயணத்தில் தமிழ், வடமொழி நூல்களைப் படித்து மொழித்திறனை மேம்படுத்திக் கொண்டவர்.

A) வீரமாமுனிவர் B) எல்லிஸ் துரை

C) கால்டுவெல் D) ஜி.யு. போப்

27. "தமிழ்ச் செய்யுட் கலம்பகம்" எத்தனைச் செய்யுட்களைக் கொண்டது

A) 400 B) 401

C) 600 D) 601

28. பண்பாடு, பாலாறு, சேயாறு, வளநாடு - இவை

A) நெடில் தொடர்க் குற்றியலுகரம்

B) உயிர்த் தொடர்க் குற்றியலுகரம்

C)முற்றியலுகரம்

D) யாவுமில்லை

29. திருக்குறள் எத்தனை மொழிகளில் மொழிபெயர்கப் பெற்றுள்ளது.

A) அறுபத்தேழு B) எண்பத்தேழு

C) நூற்றேழு D) அறுபத்தெட்டு

30. "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்பது

A) நன்னூல் B) தொல்காப்பியம்

C) அகத்தியம் D) யாவுமில்லை

31. தமிழில் இடுகுறிப்பெயர்கள் மிகவும் ------------
A) குறைவு B) அதிகம்
C) அரிது D) உண்டு

32. மறம் செய்தலும் அறம் செய்தலும் ------
A) அகம் B) புறம்
C) அகப்புறம் D) மரபு

33. "முதுமொழிக் காஞ்சி" என்பது,
A) காஞ்சித்திணையின் துறைகளுள் ஒன்று
B) திருக்குறளின் விளக்கம் எனப் படுகிறது.
C) பழமொழி நானூறின் சார்பு நூல்
D) உரைநடையில் அமைந்த நூல்

34. தலபுராணங்கள் - பாடுவதில் புகழ்பெற்றவர்
A) தெ.பொ.மீ
B) உ.வே.சா
C) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
D) மு.வ

35. மாறுபட்டுள்ள சொல்லைத் தனித்துக் காட்டுக.
A) ஆய்தம் B) முப்புள்ளி
C) முப்பாற்புள்ளி D) மெய்

36. இடுகுறிச் சிறப்புப் பெயர் காட்டுக.
A) மரம் B) மலை
C) இலை D) தென்னை

37. காரணச் சிறப்புப் பெயர் எடுத்துக்காட்டுக.
A) பறவை B) கால்நடை
C) வளையல் D) சித்திரையான்

38. திருஞானசம்பந்தருடன் தொடர்புடைய மன்னன்.
A) அரிமர்த்தன பாண்டியன்
B) நெடுஞ்செழியன்
C) கூன்பாண்டியன்
D) வரகுண பாண்டியன்

39. களவழி நாற்பது என்னும் இலக்கழியத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது.
A) ரூபாவதி B) கலாவதி
C) மானவிஜயம் D) அமராவதி

40. பம்மல் சம்பந்தனாரின், வாணிபுரத்து வணிகன், விரும்பிய விதமே. ஆமலாதித்தியன் - இந்நாடகங்கள் எவற்றைத் தழுவி படைக்கப்பட்டவை.
A) சேக்ஸ்பியரின் நாடகம் B) கம்பராமாயணம்
C) சிலப்பதிகாரம் D) மணிமேகலை

41. முற்றுப்பெறாத வினைச்சொல் பெயர்கொண்டு முடிவது.
A) வினையெச்சம் B) பெயரெச்சம்
C) முற்றெச்சம் D) யாவுமில்லை

42. மரபு அறிந்து பொருத்துக.

| **சொல்** | | **வினைமரபு** |
|---|---|---|
| A) நெல் | - | 1. கொய் |
| B)நீர் | - | 2. ஏற்று |
| C) மலர் - | | 3. பாய்ச்சு |
| D) விளக்கு | - | 4. தூற்று |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 4 | 2 | 1 |
| B) | 1 | 3 | 4 | 2 |
| C) | 2 | 3 | 1 | 4 |
| D) | 4 | 3 | 1 | 2 |

43. அகரவரிசையில் அமைந்த ஒன்றைத் தேர்க.
A) சீரகம், சென்னை, சாறு, செல்வம், சுண்ணம்
B) சாறு, சீரகம், சுண்ணம், செல்வம், சென்னை
C) சென்னை, சாறு, செல்வம், சுண்ணம், சீரகம்
D) சுண்ணம், சீரகம், சென்னை, செல்வம், சாறு

44.கேளிக்கை நாடகம் என்ற வகையினையும் நாடக நையாண்டியினையும், அடுக்குமொழி வசனங்களையும் தமிழ் நாடக உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்
(A) பரிதிமாற்கலைஞர் (B) சங்கரதாசு சுவாமிகள்
(C) பம்மல் சம்பந்தனார்(D) யாவருமிலர்

45. உவமை, உவமேயம், பொதுத்தன்னை வெளிப்பட்டு உவம உருபு மறைந்து வருவது.
(A) எடுத்துக்காட்ட உவமை அணி
(B) வேற்றுப் பொருள் வைப்பு அணி
(C) பிறிதுமொழிதல் அணி
(D) உவமை அணி

46. பள்ளமான சேற்று நிலத்தில் உழவுத்தொழில் செய்துவாழும் பள்ளர்களின் வாழ்வைச் சித்தரித்துக் கூறுவதாக அமைவது.
(A) குறவஞ்சி (B) தூது
(C) பள்ளு (D) மாலை

47. பெயர்ச்சொல் சில மாற்றங்களுடன் அழைத்தல் பொருளில் வருவது.
(A) எழுவாய் வேற்றுமை (B) இரண்டாம் வேற்றுமை
(C) ஆறாம் வேற்றுமை(D) விளிவேற்றுமை

48. மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரைத் தமிழகத்தின் அன்னிபெசண்ட் எனப் புகழ்ந்தவர்.
(A) ஈ.வே.ரா பெரியார் (B) திரு.வி.க
(C) அறிஞர் அண்ணா (D) காந்தியடிகள்

49. தமுக்கம் மண்டபம் யாரால் கட்டப்பட்டது.
(A) இராணி மங்கம்மாள்
(B) திருமலை நாயகர்
(C) அரிமர்த்தன பாண்டியன்
(D) கூன்பாண்டியன்

50. தமிழைப் பக்திமொழி என்று கூறியவர்.
(A) இராமாலிங்க அடிகள்
(B) குன்றக் குடி அடிகளார்
(C) சேக்கிழார்
(D) தனிநாயகம் அடிகளார்

51. சைவத்திருமுறைகள்: வைணவப் பிரபந்தங்கள் தொகுத்தவர் பெயர்கள்- நிரல் படுத்துக.
(A) நம்பியாண்டார் நம்பி: நாத முனிகள்
(B) நாதமுனிகள்: சேக்கிழார்
(C) இராசராசன்: நாதமுனிகள்
(D) வள்ளலார்: நம்மாழ்வார்

52.மூவர் தமிழ்: மூவாயிரம் தமிழ் - நிரல் படுத்துக.
(A) தேவாரம் : திருமந்திரம்
(B) திருமந்திரம் : தேவாரம்
(C) திருவாசகம் : தேவாரம்
(D) தேவாரம் : திருப்பாவை

53.பொருத்துக.
(A) காஞ்சி - 1. சுங்குடிப் புடவைகள்
(B) திருப்பூர் - 2. கண்டாங்கிச் சேலைகள்
(C) மதுரை- 3. போர்வைகள்
(D) உறையூர் - 4. பின்னலாடைகள்
(E) சென்னிமலை - 5. பட்டாடைகள்

| | (a) | (b) | (c) | (d) | (e) |
|---|---|---|---|---|---|
| A) | 4 | 3 | 2 | 5 | 1 |
| B) | 5 | 4 | 1 | 2 | 3 |
| C) | 3 | 5 | 4 | 2 | 1 |
| D) | 2 | 4 | 3 | 1 | 2 |

54.முதலாம் மகேந்திரவர்மப் பல்லவனைச் "சித்திரகாரப் புலி" எனக் கூறும் ஆவணம்.
(A) செப்பேடு
(B) இலக்கியம்
(C) கல்வெட்டுகள்
(D) வரலாற்று நூல்கள்

55. செத்தனர் - வேர்ச் சொல் தருக.
(A) செத்து (B) செது
(C) செத்த (D) சா

56. காலந்தோறும் ஏற்படும் சொற்பொருள் மாற்றங்களைப் பதிவுசெய்து சீர்மைப்படுத்தி மொழி வளர்ச்சிக்கு உதவுவது.
(A) இலக்கியங்கள் (B) வரலாற்று நூல்கள்
(C) செய்தித் தாள்கள் (D) அகரமுதலிகள்

57. நெல் குத்தும்பொது பெண்களால் பாடப்படம் ஒருவகைப் பாட்டு
(A) சுண்ணம் (B) வள்ளை
(C) தூக்கு (D) ஏசல்

58. இனஎழுத்து இல்லாத எழுத்து எது?
(A) ய (B) ழ
(C) ர (D) ஃ

59. உ.வே.சா அவர்களின் பெயரால் இயங்கும் நூல் நலையம் எந்த ஆண்டு நிறுவப்பட்டது.
(A) 1947 (B) 1942
(C) 1855 (D) 2006

60. தொண்ணூற்று ஆறு பூக்களின் பெயர்களைப் பத்துப் பாட்டு இலக்கியத்தில் பதிவு செய்தவர்.
(A) உ.வே.சா (B) பரணர்
(C) கபிலர் (D) நக்கீரர்

61. வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு
(A) 1966 (B) 1957
(C) 1972 (D) 1984

62."உழவர்களின் நண்பன்" - யார்.
(A) மண்புழு (B)எலி
(C) பறவை(D) பாம்பு

63. பயனிலை எத்தனை வகைப்படும்.
(A) மூன்று (B) நான்கு

(C) இரண்டு (D) ஆறு

64. "கற்றவனூக்குக் கட்டுச்சோறு வேண்டா" எனப் பொருள் தரும் பழமொழி கூறுக
(A) ஓட்டலில் வேலைக்கு உண்
(B) ஆற்றுணா வேண்டுவதில்
(C) விருந்திருக்க உண்ணாதே
(D) தேடிச் சோறுநிதம் தின்

65. தாகூரின் விசுவபாரதி கல்லூரி உள்ள மாநிலம்.
(A) மத்தியப் பிரதேசம் (B) உத்திரப் பிரதேசம்
(C) மேற்கு வங்காளம் (D) கேரளா

66. ஈ.வே.இராமசாமி - என்பாரைப் "பெரியார்" எனும் பட்டம் அளித்துப் போற்றியவர்
(A) அறிஞர் அண்ணா (B) காமராசர்
(C) தாய்மார்கள் (D) திரு.வி.க

67. 1970-ல், சமூக சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக - யுனெஸ்கோ விருது பெற்றவர்.
(A) தலாய்லாமா (B) பெரியார்
(C) காமராசர் (D) சத்தியமூர்த்தி

68. திரு.வி.க. பசும்பொன் முத்துராமலிங்கரை எவ்வாறு போற்றினார்.
(A) குறைவற வாசித்தான்
(B) தென்னகச் சிங்கம்
(C) தேசியம் காத்த செம்மல்
(D) வீரத்தியாகி

69. பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் எவ்வாறு அறியப்படுகிறார்.
(A)மக்கள் கவிஞர் (B) புரட்சி கவி
(C) உவமைக் கவிஞர் (D) ஆசுகவி

70. தீபங்குடி கோவில் எந்தச் சமயத்தொடர்புடைத்து.
(A) வைணவம் (B) சைவம்
(C) சமணம் (D) பௌத்தம்

71. பகுத்தறிவுக் கவிராயர் எனத் தமிழக மக்களால் அழைக்கப்படுபவர்
(A) பெரியர் (B) பாரதிதாசன்
(C) சுரதா (D) உடுமலை நாராயண கவி

72. ஓர் அடிக்குள் சொற்களை முன்பின்னாக மாற்றிப் பொருள் கொள்வது.
(A) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
(B) ஆற்றுநீர்ப் பொருள்கோள்
(C) மொழிமாற்றுப் பொருள்கோள்
(D) அடிமறி மாற்றுப் பொருள்கோள்

73. "உலக மொழிகளுக்கு எல்லாம் தாய்மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறியவர்.
(A) நைடா (B) அகத்தியலிங்கம்
(C) கால்டுவெல்(D) நோம் சாம்சுகி

74. கிரேக்க, இலத்தீன் மொழிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ச் சொற்கள் இருப்பரை எடுத்துக் காட்டியவர்.
(A) தேவநேயப் பாவாணர்(B) ஞானகிரியார்
(C) பரிதிமாற் கலைஞர் (D) கால்டுவெல்

75. "ஒரு கருத்தைப் பிறருக்குத் தெரிவித்தல்" எனும் பொருள்படும் சொற்கள் (ஒரு பொருள் குறித்த பல சொல்) எத்தனை உள்ளன.
(A) 60 (B) 32
(C) 40 (D) 42

76. தமிழுக்கே உரித்தான ஓரெழுத்து ஒருமொழிச் சொற்கள் எத்தனை உள்ளன.
(A) 36 (B) 42
(C) 32 (D) 52

77. இணைச்சொற்கள் எத்தனை வகைப்படும்
(A) இரண்டு (B) நான்கு
(C) மூன்று (D) ஆறு

78. நன்னூல் - மூவகை நூல்களுள் எவ்வகை.
(A) மூன்றும் (B) முதல் நூல்
(C) சார்பு நூல் (D) வழி நூல்

79. அஞ்சலையம் மாளுடன் தொடர்பற்ற ஒன்று.
(A) நீலன் சிலையை அகற்றும் போராட்டம்
(B) வெள்ளையனே வெளியேறு போராட்டம்
(C) சிப்பாய்க் கலகம்
(D) உப்பு காய்ச்சும் போராட்டம்

80. திகம்பர சுவாமிகள் யாரைப் பார்த்து, "இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார்" எனக் கூறினார்.
(A) இராமலிங்க வள்ளலார் (B) திரு.வி.க

(C) உ.வே.சா (D) மு.வ

81. தமிழ் முனிவர்களுள் ஒருவராக வீரமாமுனிவரைக் குறிப்பிட்டவர்
(A) ரா.பி. சேதுப்பிள்ளை (B) ந. சஞ்சீவி
(C) பரிதிமாற்கலைஞர் (D) திரு.வி.க

82. வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி பொருத்தக.
(A) சிற்றிலக்கியம் - 1. தொன்னூல் விளக்கம்
(B) இலக்கணம் - 2. தேம்பாவணி
(C) காப்பியம் - 3. திருக்காவலூர்க் கலம்பகம்
(D) ஒப்பிலக்கணம் - 4. கொடுந்தமிழ் இலக்கணம்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 3 | 1 | 2 | 4 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 3 | 4 | 2 | 1 |
| D) | 2 | 4 | 1 | 3 |

83. பொருத்துக
(A) தமிழின் தொன்மையை- 1. பரிதிமாங்கலைஞர் உலகறியச் செயதவர்
(B) தமிழைத் தழைக்கச் செய்தவர் - 2. தேவநேயப் பாவாணர்
(C) தனித்தமிழுக்கு வித்திட்டவர் - 3. கால்டுவெல்
(D) தனித்தமிழ் ஊற்று - 4. மறைமலையடிகள்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 3 | 4 | 1 | 2 |
| C) | 4 | 2 | 3 | 1 |
| D) | 1 | 3 | 4 | 2 |

84. சிலப்பதிகாரத்திற்கு வழங்கும் சிறப்புப் பெயர்களில் ஒன்று
(A) கண்ணகி கதை
(B) பொற்கொல்லன் சூது
(C) அடிகள் அகம்
(D) உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்

85. வைணவத்தில், சிறிய திருவடி - என்றால்
(A) கருடன் (B) பாம்பு
(C) சக்கரம் (D) அனுமன்

86. திவ்வியகவி - எனப் போற்றப்படுபவர்.
(A) குலசேகராழ்வார்
(B) நம்மாழ்வார்
(C) பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்
(D) நாதமுனிகள்

87.தாண்டக வேந்தர் - இயற்பெயர் கூறுக.
(A) அப்பர் (B) தருமசேனர்
(C) மருள்நீக்கியார் (D) திருநாவுக்கரசர்

88.குறிஞ்சித்திணை பொழுது தருக.
(A) குளிர் காலம், முன்பனிக்காலம், யாமம்.
(B) இயவேனில் , முதுவேனில், பின் பனி , நண்பகல்
(C) கார்காலம், மாலை
(D) கார்காலம், யாமம்

89.மார்கழி, தை ஆகிய இரண்டும்
(A) கார்காலம் (B) முன்பனிக்காலம்
(C) இளவேனில்காலம் (D) குளிர்காலம்

90. பாலை நிலத்திற்குரிய பறவைகள்
(A) கிளி, மயில் (B) நாரை, அன்னம்
(C) புறா, பருந்து (D) கோழி, மயில்

91. பாடாண்திணை என்பது
(A) ஆண்மகனின் ஒழுகலாறுகள்
(B) போரின் தன்மைகள்
(C) பெண்மகளின் ஒழுகலாறுகள்
(D) போர்க்கள வருணனை

92. தொடைவிகற்பம் எத்தனை
(A) 30 (B) 35
(C) 26 (D) 18

93. இரண்டாம் அடியில் தனிச் சொல் பெற்று ஒரு விகற்பத்தானும் இரு விகற்பத்தானும் வருவது.
(A) குறள் வெண்பா
(B) இன்னிசை வெண்பா
(C) நேரிசை ஆசிரியப்பா
(D) நேரிசை வெண்பா

94. உருபுகள் உள்ள வேற்றுமை எத்தனை
(A) 2 (B) 6
(C) 8 (D) 7

95. செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறனையம் தெரிவித்துக் காலத்தை வெளிப்படையாகக் காட்டுவது.
(A) தெரிநிலைப் பெயரெச்சம் (B)முற்றெச்சம்

(C) தெரிநிலை வினைமுற்று(D) குறிப்புப் பெயரெச்சம்

96.1.இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வலிமிகாது.
2.பண்புத்தொகை, வினைத்தொகையில் வலிமிகும்
3. எழுவாய்த் தொடரில் வலிமிகாது.

(A) 1 ம் 3ம் சரி (B) 1ம் 2ம் தவறு
(C) 2 ம் 3 ம் சரி (D) 1ம் 3ம் தவறு

97. கண்ணகியின் சிலம்பில் என்ன வகைப் பரல்கள் இருந்தது.

(A) முத்துப் பரல்கள் (B) பவளப் பரல்கள்
(C) மாணிக்கப் பரல்கள்(D) நவமணிப் பரல்கள்

98. பின்வரும் இலக்கணக் குறிப்புக்குரிய பொருந்தாச் சொல்லைத் தேர்க.
உவமைத் தொகை

(A) தமிழன்னை (B) மதிமுகம்
(C) மலர்ப் பாதம் (D) கல்திரள் தோள்

99. பொருத்துக.

| இயற்பெயர் | சிறப்பப்பெயர் |
|---|---|
| (A) திரு.வி.கலியாண சுந்தரம் | - 1. தமிழ்த்தாத்தா |
| (B) மறைமலையடிகள் | - 2. தமிழ்த் தென்றல் |
| (C) இரா.பி. சேதுப்பிள்ளை | - 3. தனித்தமிழ் வித்தகர் |
| (D) உ.வே. சாமிநாத ஐயர் | - 4. சொல்லின் செல்வர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| A) | 2 | 3 | 4 | 1 |
| B) | 4 | 2 | 3 | 1 |
| C) | 1 | 3 | 4 | 2 |
| D) | 3 | 1 | 4 | 2 |

100. பின்வருவனவற்றுள் எவை இணையில்லை?
(A) முதல் கலம்பகம் - நந்திக் கலம்பகம்
(B) முதல் பரணி - தக்கயாக பரணி
(C) முதல் நாவல் - பிரதாப முதலியார் சரித்திரம்
(D) முதல் உலா - திருக்கையிலாய ஞான உலா.